**தலைப்பு 312 – மேல் மாகாண சபை தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2016 ஆம் ஆண்டு**

## 1. தூரநோக்கு, பணிக்கூற்று மற்றும் பிரதான செயற்பாடுகள்

### 1.1 தூரநோக்கு

சகவாழ்வு மற்றும் நிரந்தர அபிவிருத்தியால் மேல் மாகாணம் முன்னணியில்

### 1.2 பணிக்கூற்று

நிதி, பௌதீக மற்றும் மனித வளத்தை மிக திறமையாக கொண்டு நடாத்தி சகல சமூகத்தினருக்கும் நன்மை பயக்கும் சமாதானம் மற்றும் சகவாழ்வு நிறைந்த நிரந்தர அபிவிருத்தியை ஏற்படுத்தல்.

### 1.3 பிரதான செயற்பாடுகள்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தம் மற்றும் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகள் என்பவற்றின் பிரகாரம் கடமைகளையும் செயற்பாடுகளையும் நிறைவேற்றுதல்.

## 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

**மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

மேல் மாகாண சபைக்காக ஒதுக்கீடுசெய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 25,843.99 மில்லியன் தொகையானதுடன் அதில் மீளாய்வாண்டின் இறுதிவரை ரூபா 23,937.79 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க, ரூபா 1,906.20 மில்லியன் தொகை அல்லது தேறிய நிதியேற்பாடுகளில் 7.4 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 21,743.79 | 21,743.79 | - | - |
| மூலதனம் | 4,100.20 | 2,194.00 | 1,906.20 | 46.49 |
| **மொத்தம்** | **25,843.99** | **23,937.79** | **1,906.20** | **7.38** |

## 3. கணக்காய்வு அவதானிப்பு

தலைப்பின் கீழ் பாராளுமன்றத்தால் ஒதுக்கீடுசெய்யப்பட்டிருந்த நிதியேற்பாடுகள் மாகாண சபையினால் மாகாண சபை நிதியத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தது. மாகாண சபை நிதியம் கணக்காய்வு செய்யப்பட்டு அது தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.